மறுவாழ்வு

MED-EL

# பெரியவர்களுக்கான இசை பற்றிய குறிப்புகள்



hearLIFE

BRIDGE
to better communication

கடந்த சுமார் 30 ஆண்டுகளில் செவிச்சுருள் வளைக்கருவி (சிமி) களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் செவியின் கேட்டறிதல் திறனில் பெருமளவு பாதிப்புக்குள்ளானோர், இக்கருவியின் துணையுடன் இன்று பேச்சு ஒலித்தூண்டல்களை எளிதாகப் புரிந்துகொள்ள வகை செய்துள்ளது. இக்கருவி பொறுத்தப்பட்ட பெரும்பாலான இளைஞர்கள், ஒருவரோடு, ஒருவருமாகவும், ஒரு சிறு குழுவினராக தங்களுக்குள்ளும், தொலைபேசி வழியாகவும் கூட, உரையாடல் நிகழ்த்தும் திறன் பெற்றுள்ளனர். இவ்விளைஞர்களில் ஏறத்தாழ அனைவரும் பேச்சு ஒலிகளை இக்கருவியின் உதவியுடன் துல்லியமாக கேட்டறிதல் எவ்வித இடரும் இல்லை என்றும், இருப்பினும், பலருக்குப் பேச்சு ஒலிகளலல்லாத (அந்த வரம்பிற்கு அப்பாற்பட்ட) ஒலிகளை கேட்டறிதலில் தெளிவு இல்லாது உணர்வதாகவும் கூறுகிறார்கள். இசை கேட்டறிதலில், தங்களுக்கு அந்த இசையை முன் கேட்டறிந்த அனுபவ உணர்வு இப்போது கிடைக்கவில்லை என்பது அவர்களின் ஆதங்கம். இந்த ஏடு கருவியின் துணையுடன் இடரின்றி இசையைக் கேட்டறிந்து மகிழ கையாள வேண்டிய வழிமுறைகளைக் கூறுகிறது. இதைக் சாத்தியமாக்க, பெரிய அளவு கண்கட்டு வித்தைகளையோ, நடைமுறைக்குக் கடினமான பயிற்சிமுறைகளையோ, கையாளத் தேவையில்லை. கீழே தரப்பட்டுள்ள எளிய வழிமுறைகளைப் பின்பற்றுதல் மூலம், இசை கேட்டறிதலை/இசையின் சுகம் நுகர்தலைச் சாத்தியமாக்கிக் கொள்ளலாம்.

## முன் அறிந்தன கொண்டு ஆரம்பம்

நீங்கள் ஏற்கெனவே நன்கு அறிந்த ஒரு பாடலை ஆராய்ந்து தேர்வு செய்யுங்கள். அப்பாடலை நிறுத்திய பின்பும், நீங்கள் அதன் மீது கொண்டுள்ள ஈர்ப்பால், அப்பாடல் உங்கள் சிந்தனையில் ஒலித்துக் கொண்டேயிருக்கும் அளவிலான, உங்களுக்கு மிக ஈடுபாடுடைய பாடலாக அது இருக்கவேண்டும். பொதுவாக, அத்தகைய பாடல்கள் நீங்கள் உங்களின் இளமை பருவத்தில் கேட்ட பாடல்களுள் ஒன்றாக இருக்கும். ஏனெனில் அப்பருவத்தில்தான், கேட்கும் பாடல்களின் மிகப்பலவனவற்றின் பாடல் வரிகளும் இசையும் உங்கள் மனதில் என்றெனறும் பசுமரத்தில் பதிந்த ஆணிபோல் பதிந்து இருக்கும்.

அடுத்ததாக, தேர்வு செய்த அப்பாடலின் தரமான பதிவு (recording) தேவை. உங்களிடம் கைவசம் இல்லையேல், இணையதளம் உதவியுடன், 'யூ டியூப்' (www.youtube.com) வழியாக அப்பாடலின் பதிவைப் பெறலாம். இல்லையேல், அருகாமையில் உள்ள 'இசை நூலகங்கள்' (music libraries) உதவியுடன் பதிவைப் பெறலாம்.

அடுத்தபடியாக, ஓர் அமைதியான சூழலைத் தேர்வுசெய்து, அப்பாடலைப் பலதடவை இசைக்கச் செய்து கேட்கவும், அதை எப்படி உணர்கிறீர்கள்? உங்கள் நினைவில் உள்ளது போல இப்போதும் அப்பாடல் இருந்ததா? அதெல்லாம்விட, இன்னும் முக்கியமாக, நீங்கள் இப்போதும் இரசிக்கும்படி இருந்ததா? இசைப்பின் ஒலிஅளவை (volume) குறைத்தோ, பெருக்கியோ செய்து, அம்மாற்றங்களை இன்று உணர்வு தரத்தில் எப்படிப்பட்ட மாறுதல்கள் உட்புகுத்துகின்றன என ஆராயவும். உங்களது இசை கேட்டறியும் நுணுக்கத்திறன் நீங்கள் எந்த அளவில் தொடர்ந்து பயிற்சி ஏற்கிறீர்கள் என்பதற்கேற்ப அதிக வளர்ச்சி பெறுவதை உங்களால் கண்கூடாக அறியமுடியும். பொறுமையுடன் விடாமுயற்சி செய்தல் காலப்போக்கில் நல்ல பயனளிக்கும் என்பது உறுதி.

பாடல் வரிகளைப் புரிவதில் சிரமம் இருப்பின், அப்பாடலின் அச்சுப்பிரதி கைவசம் இருக்கட்டும். பலநேரங்களில், உண்மையான பாடல்வரிகளும், நாம் நமக்குத் தெரியும் என நம்பிக் கொண்டிருக்கும் அப்பாடல் வரிகளும் (சில வார்த்தைகள்) ஒன்றாக இராது. இணையதளம் சரியான பாடல் வரிகளை நாம் அறிய பேருதவி செய்யும். அந்தப் பாடல் இடம்பெற்ற படத்தின் பெயரோ, அல்லது அப்பாடலின் முதல் ஓரிரு வரிகளோ, கொண்டு ‘கூகுள்’ (www.google.com) உதவியுடன் அப்பாடல் முழுவதையும் நாம் பெறலாம். வேறு தகுந்த ‘ஸெர்ச் என்ஜின்’ (Search engine) களின் துணையையும் நாடி முழுப் பாடலின் வரிகளையும் பெறலாம்.





## எளிமையாக இருக்கட்டும்

ஆரம்பக் கட்டத்தில் பாடல்களைத் தேர்வு செய்யும்போது, அவை சுலபமான வார்த்தைகளாக்கிய எளிய நடை பாடல்களாகவும், துல்லியமான குரலில் ஒருவரால் மட்டும் பாடப்பெற்றதாகவும் இருக்கும்படி தேர்வு செய்யவும். செவிச்சுருள் வளைக்கருவியின் உதவியுடன் இசை கேட்டறிதல் பயிற்சி பெறுவோருள் பலரும் 'ஜானி காஷ்' (Johnny Cash) ன் ஆரம்ப கால பாடல்களான 'ஐ வாக் தி லைன்' (Ring of Fire) போன்றன கேட்டறிதலுக்கு மிக எளிதாக உள்ளதாக கூறுகின்றனர். எண்ணிக்கையில் குறைந்த உடன் இசைக்கப்படும் இசைக்கருவிகள் ( பெரும்பாலும் கிடாரும் (Guitar), ஒரு தாள வாத்தியமும்), எளிய மெட்டு, பாடுபவரின் (Cash's) தீர்க்கமான குரல், ஏறக்குறைய பேச்சு போலும் பாடும் நடை ஆகியன இவரது பாடல்கள் கேட்டறிதலுக்கு ஆரம்ப நிலையில், எளிதாக உணரப்படுவதற்கு சில முக்கிய காரணங்கள். வாய்ப் பாடலுக்குப் பதிலாக கருவிகள் இசைத்துப் பாடலைக் (Instrumental music) கேட்க ஆசைப்படின், பாடல்கள் தெரிந்த பாடல்களாக இருப்பதோடு, அதிகப்படியான கருவிகள் இசைத்திருக்கும் பாடல்களாக இவ்வாறு (கூடிய மட்டும் தனி ஒரு கருவி இசையாகவோ, அல்லது ஓரிரண்டு வகைக்கருவிகள் மட்டுமே இசைக்கப்பட்ட பாடல்களாகவோ) இருக்கட்டும். ஏற்கனவே குறிப்பிட்டபடி, 'யூ டியூப்', இது போன்ற பாடல்களைத் தேர்வு செய்ய உதவும்.

நீங்கள் விரும்பும் பாடல்வகைக் குறிப்பைப் பதிவு செய்து தேடுதல் செய்தால் - உதாரணமாக, 'பியானோ ஸோலோ' (Piano Solo) அல்லது 'பியானோவும் வயலினும்' (Piano & Violin) அல்லது 'கிடார் ஸோலோ' (Guitar solo) என்பன போன்று - அவ்வகைகளில் இணையதளத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டு உங்களுக்கு அளிக்கப்படும். உங்களது முக்கிய விருப்பம் எதுவாகினும் அதற்கேற்ற வகைப்படல்களை நீங்கள் பெற நீங்கள் எடுக்க வேண்டிய முயற்சி மேற்கூறியபடி இணையதளம் மூலம் தேடுதலே.

## உங்கள் அபிமான இசை

உங்களது அபிமான கலைஞர்களின் இசைப்படைப்புகளில் எவைஎவை 'யூ டியூப்' -ல் இடம் பெற்றுள்ளன என்பதறிய உங்களுக்கு ஆவல் இருக்கும். 'எல்விஸ் ப்ரஸ்லி' (Elvis Presley) 'எல்விஸ் காஸ்டெலோ' (Elvis Costello), அல்லது 'டஃப்பி' (Duffy) யோ அவர்களின் படைப்புகள் அதில் இடம்பெற்றிருக்கலாம். அதில் இடம்பெற்றுள்ள பலதரப்பட்ட பாடல்களுள், உங்கள் மனதிற்கு மிகவும் பிடித்தனவற்றைத் தேர்ந்தெடுக்கவும், இணைப்புகளுள் சில பாடல்கள் வரிகளுடன் காணப்படலாம். இது மேலும் அதிகப்பயனுள்ளதாக உங்களுக்கு அமையும்.

## ஒலி -ஒளி காட்சி (Auditory visual)

'யூ டியூப்' தளத்தின் பயன்களுள் ஒன்று, நாம் விரும்பும் இசைப் படைப்புகள் ஒலிவடிவில் மட்டுமில்லாது, ஒளிக்காட்சிகளுடனும் இணைந்திருப்பதே. பேச்சைப் புரிந்து கொள்ளுதலில், ஒளித்தூண்டல்களும் உதட்டசைவுகளை பெரும் பங்காற்றுவதை நாம் அறிவோம். இசை கேட்டறிதலிலும், அதுபோலவே, ஒளித்தூண்டல்கள் (இசையுடன் சம்மந்தப்பட்ட ஒளிக்காட்சிகள்) உதவி புரிகின்றன. ஒரு பாடகரின் உதடுகளின் அசைவுகள் அவர் பாடும் பாடலை நாம் புரிவதற்கு ஓரளவு உதவுகினறன; புரிதலை எளிதாக்கும் அதேபோல், ஒரு 'பியானோ' வாசிப்பவரின் கை விரல்கள், அக்கருவியின் 'மீட்டு விசைப் பலகையில்' (keyboard) மாறிமாறி அமரும் காட்சித் தூண்டல்கள் இசை கேட்டறிதலில் மறைமுக வழிகாட்டிகளாகப் பங்காற்றும்.

## கேட்டறிதலுக்கேற்றச் சூழல்: (Listening Environment)

''எச் சூழலில் பேச்சினை எளிதாகக் கேட்டறிதல் சாத்தியமாகிறது?'' என்ற வினாவை நீங்களே உங்களிடம் முன்வையுங்கள். ''ஒரு அமைதியான எந்தத் தேவையில்லா இதர ஒலி அதிர்வுகளும் இல்லாத சூழலில் தான் பேச்சினை எளிதாகக் கேட்டறிய முடிகிறது.'' என்பதே, பெரும்பாலான, செவிச்சுருள் வளைக்கருவியின் பயனாளிகளின் பதிலாக இருக்கும். மேற்கூறியது, பேச்சுக்கு மட்டுமின்றி இசை கேட்டறிதலுக்கும் பொருந்தும். தேவையற்ற பின்னணி சப்தங்கள், ஒலிச் சிதறல்கள் காரணமாகும் வடிவ அமைப்புகள், ஆகிய குறைபாடுகள் கொண்ட அறைகளில் இசை கேட்டறிதல் ஒரு சுக அனுபவமாக இராது.

## இசை சாதனங்கள் (Equipments)

தரமான கருவிகள், உங்களிடம் இருக்குமேயானால், இசை கேட்டறிதல் இன்ப அனுபவமாகும். உங்களிடம் ஏற்கனவே உள்ள கருவிகளின் தரத்தைச் சோதித்து உண்மை நிலை அறியுமுன்பாக, அவசரப்பட்டு புதிய கருவிகளை வாங்க வேண்டாம். உங்களின் கணிப்பில் அது தரம் குறைந்ததாக நீங்கள் கருதினாலும், கேட்புத்திறனில் எவ்வித குறைபாடும் இல்லாத உங்கள் நண்பர்/உறவினரின் கணிப்புகளில் அக் கருவியின் தரம் என்ன என்பதையும் அறிந்து பின் தேவைக்கேற்ப முடிவு எடுங்கள். அதே போலும் வேறு கருவிகளையோ, அல்லது நூதன மின்னணு இசை சாதனங்களையோ, (ஐ பாட், எம்பி3 பிளேயர், போர்ட்டபிள் ஸி.டி.ப்ளேயர் - pods, MP3 Player, Portable CD Players) வாங்கிப் பயன்பெறலாம். அவைகளுடன் வழங்கப்படும் 'தலையில் அணியும் ஒலிபெருக்கி' (Headphone) உங்களின் ஒலி செயலின் (Audio Processor) 'ஒலி மாற்றிகளின்' (Microphones) மீது பொருத்தியோ, அல்லது 'நேரடி ஒலி உள்ளளிப்பாக' (direct audio input) பயன்படுத்தியோ மேற்கூறிய நூதன மின்னணு வகை இசை சாதனங்களின் பயனடையலாம்.

நீங்கள் இசை கேட்டறிதலுக்குக் கணிணிகளைப் (Computers) பயன்படுத்தினால், அவைகளுடன் இணைந்த ஒலிபெருக்கும் கருவிகள் (Built - in speakers) பொதுவாகத் தரத்தில் குறைந்தன என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். ஆகவே, தரமான 'புற ஒலிபெருக்கிகளை' (external speakers) மாற்றாகப் பயன்படுத்துவது அவசியம்; தரமான 'தலை அணியும் ஒலிபெருக்கிகளையோ' அல்லது 'நேரடி ஒலி உள்ளளிப்பையோ' பயன்படுத்தவும். ஏற்கனவே முன்பு கூறியதுபோல், கருவிகளின் ஒலி வழங்கும் தரத்தை நீங்கள் நிர்ணயிப்பதுடன், கேட்டறியும் திறனில் குறைபாடுகள் இல்லாத உங்களது உறவினர்/நண்பர்களின் உதவியைக், கருவிகளின் தர நிர்ணயத்தில் இறுதியான முடிவெடுக்க நாடிப் பெறுங்கள்.

## ஒரு இசைக்கருவியை இசைத்திடல்

நீங்கள் எப்போதாவது ஒரு இசைக்கருவியை இசைத்துள்ளீர்களா?
அப்படியானால் இப்போது ஒரு பயிற்சியாக, அக்கருவியை இசைத்து, செவிச்சுருள் வளைக் கருவி (CI) யின் உதவியுடன் நீங்கள் அந்த இசையை எப்படி உணர்கிறீர்கள் என்று மதிப்பிடுங்கள். இதற்கு, உங்களுக்கு இசைக்கருவியை இசைப்பதில் மிகுந்த திறமையும் அனுபவமும் தேவையில்லை. மேலும் இது இசையாக கேட்டு, ரசிப்பதற்குத் தேவையான, அடிப்படை ஆர்வத்தை நீங்கள் பெறவும் உதவக்கூடும். உங்களுக்குக் கருவியை இசைப்பதில் பயிற்சி இல்லையென்றால், கைதட்டல் முறையிலோ, அல்லது வேறு ஒலி எழுப்பல் முறையிலோ, பாடலின் மெட்டு தாளத்தை ஒலிக்கலாம். உங்களது உறவினரோ, நண்பரோ, கருவி இசைக்கத் தெரிந்தவராக இருப்பாரெனில் அவர்கள் உங்களுக்காக எளிதான ஏதாவது ஒரு பாடல் இசையைக் கருவியின் துணைகொண்டு இசைக்கலாம். இசைக்கப்படும் பாடலை நீங்கள் அறிந்ததிருந்தால் அது உங்கள் கண்முன் இசைக்கப்படும் போது, அதை சற்று அதிகத் துல்லியமாக உங்களால் உணரமுடியும்.

## எனக்கு அது பிடிக்கவில்லை



நீங்கள் இசைக் கேட்டறிதல் முயற்சியில் ஈடுபடும்போது, அதுவும் குறிப்பாக ஆரம்பக் கட்டங்களில், கேட்டும் எல்லா இசையையும் புரிந்து இரசிக்கமுடியவில்லையே என்ற வருத்தம் இருக்கக்கூடாது. எந்த ஒரு இசையையும், எல்லோராலும் ஒன்றுபோல் ரசிக்க முடியாது. அவரவர்களுக்கென்று இசையை ரசிப்பதில் தனிப்பட்ட ரசனை உண்டு. ஆகவே எவர் ஒருவராலும் எல்லா இசையையும் ஒன்றேபோல் ரசிக்கவோ/ வெறுக்கவோ முடியாது. ஆகவே, உங்களுககுப் பிடித்த இசையை முதலில் கேட்கத் தொடங்கிப் பின் நாளடைவில் சிறிது சிறிதாக உங்களுடைய ரசனையின் அளவைப் விரிவுபடுத்துங்கள். இதற்குக் காலதாமதம் ஆகும்; இருப்பினும் இதுவே சிறந்த முறை; நல்ல பயனை அளிக்கும்.

## பயிற்சி... பயிற்சி... விடா முயற்சி

தளர்வில்லாப் பயிற்சியே இசை அறிதலுக்கு ஆதாராமாகும். எவ்வளவு அதிக அளவில் இசை கேட்டறிதல் பயிற்சி எடுத்துக் கொள்கிறோமோ, அந்த அதிக அளவில் இசை கேட்டறிதலில் ஒருவர் பெறும் திறன், அவரது பொறுமை, விடாமுயற்சி, தளர்வில்லாப் பயிற்சிகளால் நிர்ணயமாகிறது.

## இரு இசை கருவூலங்கள்

''நாய்ஸ் காரீயர்ஸ்'' (NOISE CARRIERS) இது சமீப கால ஆய்வுகளின் அடிப்படையில், செவிச்சுருள் வளைக் கருவி பொறுத்தப்பட்டவர்களின் பயனுக்காக, ஸ்காட்ஸ் இசையமைப்பாளர் ஆலிவர் ஸெர்ல் (Scots Composer Oliver Searle) அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியின் ஒலிஒளி குறுந்தகடு (CD & DVD Set) இதை பெற உங்கள் தேவைக்கு உங்கள் இருப்பிடத்திற்கருகாமையில் உள்ள ''மெட்-எல்'' (MED - EL) ன் பிரதிநிதியை அணுகவும்.

'லிஸெனிங் டு மியூஸிக் வித் எ காக்லியர் இம்ப்பிளான்ட்' (Listening to Music with a Cochlear implant):
மார்க் ரோஸ் (Mark Rose) என்பவர், செவிச்சுருள் வளைக்கருவியை தான் பொருத்திக்கொண்ட பின், இசை கேட்டறிதலில் தனக்கு ஏற்பட்ட உண்மை அனுபவங்களைத் தொகுத்து படிக்க உற்சாகம் தரும் வகையில் எழுதியுள்ள கட்டுரைகள் அடங்கியது. பகுதிகள் (1-4) விவரங்கள் பெற வலைதள முவகரி:
http://www.hearinglossweb.com/tech/ci/music/ross.htm

MED-EL Medical Electronics
Headquarters
Fürstenweg 77a
6020 Innsbruck, Austria
office@medel.com

MED-EL India Private Ltd
#505 Pragati House
47-48 Nehru Place
New Delhi, 110019 INDIA
Ph. +91-11-41607171
Fax. +91-11-41642800
implants@medel.in

MED-EL GmbH Niederlassung Wien
office@at.medel.com

MED-EL Deutschland GmbH
office@medel.de

MED-EL Deutschland GmbH Büro Berlin
office-berlin@medel.de

MED-EL Deutschland GmbH
Office Helsinki
office@fi.medel.com

MED-EL Unità Locale Italiana
ufficio.italia@medel.com

VIBRANT MED-EL France
office@fr.medel.com

MED-EL BE
office@be.medel.com

MED-EL GmbH Sucursal España
office@es.medel.com

MED-EL GmbH Sucursal em Portugal
office@pt.medel.com

MED-EL UK Ltd
office@medel.co.uk

MED-EL UK London Office
office@medel.co.uk

MED-EL Corporation, USA
implants@medelus.com

MED-EL Latino America S.R.L.
medel@ar.medel.com

MED-EL Colombia S.A.S.
Office-Colombia@medel.com

MED-EL Mexico
Office-Mexico@medel.com

MED-EL Middle East FZE
office@ae.medel.com

MED-EL India Private Ltd
implants@medel.in

MED-EL Hong Kong
Asia Pacific Headquarters
office@hk.medel.com

MED-EL Philippines HQ
office@ph.medel.com

MED-EL China Office
office@medel.net.cn

MED-EL Thailand
office@th.medel.com

MED-EL Malaysia
office@my.medel.com

MED-EL Singapore
office@sg.medel.com

MED-EL Indonesia
office@id.medel.com

MED-EL Korea
office@kr.medel.com

MED-EL Vietnam
office@vn.medel.com

MED-EL Japan Co., Ltd
office-japan@medel.com

MED-EL Liaison Office
Australasia
office@au.medel.com

www.medel.com

24149 1.0